Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# பல்லவர் மற்றும் சோழர் காலக் கட்டடக் கலை

முனைவர் தா.லதா
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சி – 620 002.

35

**முன்னுரை**

தமிழ் இலக்கியத்தில் தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினொன்கீழ்கணக்கு நூல்களும், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்களும் தமிழர்களின் கலை உணர்வை அறிந்துக் கொள்ள உதவுகின்றன.

சங்ககால ஆலயங்கள், மண்டபங்கள், வீடுகள் ஆகியவை பற்றிய சங்க இலக்கிய செய்திகளை ஆதிச்சநல்லூர், காவேரிப்பட்டினம் ஆகிய இடங்களில் மேற்கொண்ட அகழ்வாய்வுகள் உறுதிப் படுத்துகின்றன.

செங்கல், சுண்ணாம்பு, மரம் ஆகியவற்றால் கட்டடங்களும், நகர அமைப்புகளும் உருவாக்கப் பெற்றுள்ளன. கோட்டை மதில்களும், அகழிகளும் அவற்றை கடக்க பாலங்களும் கட்டப்பட்டன. மாளிகைகள் கைதேர்ந்த கலைஞர்களால் வடிவமைக்கப்பட்டன.

**பல்லவர் காலம்**

பக்தி இயக்கக் காலமாகிய பல்லவர்கள் காலம் ஆலய கட்டடக் கலை வரலாற்றில் சிறப்பு மிகு பொற்காலமாகும். தமிழகத்தில் தெய்வ வழிபாட்டுமுறை காலத்தின் கட்டாயத் தேவையாயிற்று. பல்லவர் காலத்துக்கு முன்பு கட்டப்பட்ட கோயில்கள் அனைத்தும் செங்கல், மரம், மண், சுண்ணாம்பு முதலியவற்றைக் கொண்டு கட்டப்பட்டிருந்தன. சங்க காலத்திலும் சங்கம் மருவிய காலத்திலும் கட்டப்பட்ட சிறப்பு மிக்க வீடுகளும், ஆலயங்களும் காலத்தை எதிர்த்து நிற்க முடியாமல் சிதைந்துப் போயின. இதனைப் புரிந்துக் கொண்ட பல்லவர்கள் செங்கல் முதலியவற்றைப் பயன்படுத்தாமல் மலைப்பாறைகளைக் குடைந்து குடைவரைக் கோயில்களை அமைத்தனர்.

**கட்டடப் பணிகள்**

பல்லவர்காலம் குடைவரைக் கோயில்கள், ஒற்றைக் கல் இரதங்கள், கற்றளிகள், சிற்பங்கள் செப்புத் திருமேனிகள், ஓவியங்கள் இவற்றை நினைவூட்டும் சிறப்பு மிக்க காலமாகும். திராவிடக் கட்டடக் கலைக்கு பல்லவர்கள் அடித்தளம் இட்டனர்.

முதலாம் மகேந்திரவர்மன் என்னும் பல்லவன் செங்கல், சுண்ணாம்பு, உலோகம் இவற்றைப் பயன்படுத்தாமல் பிரம்மா, சிவன், விஷ்ணு என்னும் மும்மூர்த்திகளுக்கு கோயில் அமைத்தான் என மண்டகப் பட்டு கல்வெட்டு கூறுகிறது.

**குடைவரைக் கோயில்கள்**

குடைவரைக் கோயில்கள் மாமல்லபுரத்தில் உள்ளன. அவை மகிஷாசுர மண்டபம், கண்ணன்

மண்டபம் என வழங்கப்படுகின்றன. மகேந்திரவர்மன் காலத்தில் ஏறக்குறைய இருபது குடைவரைக் கோயில்கள் குடையப்பட்டன. இவை தூண்களைக் கொண்ட மண்டபங்களின் வடிவில் உள்ளன. மகேந்திரவர்மன் மலையுச்சியையும், மலையடிவாரத்தையும் தவிர்த்து மலையின் நடுப்பகுதியில் குடைவரைக் கோயில்களை அமைத்தான்.

**ஒற்றைக் கல் இரதங்கள்**

மாமல்லபுரத்தில் ஒரே கல்லாலான ஒன்பது கோயில்கள் உள்ளன. இவை தேர் போன்ற வடிவில காணப்படுவதால் இரதங்கள் என அழைக்கப்படுகின்றன. பஞ்ச பாண்டவர் இரதங்கள் மகாபாரத காவியத்தில் உள்ள நாயகர்களை சித்தரிக்கின்றன. திரௌபதி இரதமும், அர்ச்சுனன் இரதமும் ஒரே அடித்தளத்தில் அமைந்துள்ளன. தர்மர் இரதம்; மூன்றடுக்குகளைக் கொண்ட விமானத்தை உடையதாகும். மேலும், சகாதேவன் இரதம், கணேச இரதம் உள்ளது. பிடாரி இரதம் எட்டுப்பட்டை வடிவிலான சிகரத்தைக் கொண்டுள்ளது.

தருமராசர் தேர் எனப்படும் கோயில் மூன்று அடுக்குகள் கொண்ட விமானத்தை உடையது. இரண்டாம் அடுக்கின் நடுவில் மாடப்புரை போல் உள்ளிடம் உள்ளது. அதனடியில் சோமாஸ்கந்தர் சிற்பம் செதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

பீமசேனன் தேர் எனப்படும் கோயில் நீண்ட சதுர அமைப்பில் காணப்படுகிறது. விமானத்தைச் சுற்றிலும் வழி விடப்பட்டிருக்கிறது. 45 அடி நீளம், 35 அடி அகலம், 26 அடி உயரம் கொண்ட இக்கோயிலில் தூண்களின் அடிப்பாகம் அமர்ந்த சிங்க உருவத்துடன் காணப்படுகிறது.

திரௌபதி தேர் எனப்படும் கோயிலின் அடித்தளம் 11 சதுரஅடி, உயரம் 10 அடி பல்லவர் காலத்துச் சிற்பத் திறனையும், கலைக் கற்பனையையும் புலப்படுத்தும் வகையில் இத்தேரிலுள்ள துர்க்கையின் சிலை அமைந்துள்ளது.

சகாதேவன் தேர் எனப்படும் கோயில் தன் பின்புறத்தில் யானையின் முதுகைப் போன்ற அமைப்பினையுடையது. பண்டையக் காலத்துப் பௌத்தமர்களின் பள்ளிகளைப் போன்ற அமைப்பை உடையது. இந்த தேர்க் கோயில்களை முன் மாதிரியாக வைத்துக் கொண்டு பிற்காலத்தில் பல தேர் வடிவ ஆலய கட்டடங்கள் அமைக்க முற்பட்டனர் என்பது தெளிவாகிறது.

"இந்த இரதங்களின் நீள்வட்ட வடிவமைப்பையும் மேலே போகப் போக சிறுத்துக் கொண்டே போகிற மாடியினையும், உச்சியில் முக்கோண முனைகளும், கலசமும் உடைய மிடா உருவக் கூரைகளையும் பார்த்து தான் பிற்காலக் கலைஞர்கள் கோயில் கோபுரங்களை உருவாக்கினார்கள்"[1]

(சாத்திரியார் பக் 252)

பல்லவர் காலமே கோயிற் கட்டடக் கலையின் தொடக்க காலம் எனலாம்.

**சோழர் காலம்**

பல்லவர்களுக்குப் பின் வந்த சோழப் பேரரசர்கள் கோயில்களை கற்கோயில்களாக மாற்ற முனைந்தனர். அம்முயற்சி நானூறு ஆண்டு காலம் நடைபெற்றது.

சோழப் பேரரசின் காலம் கட்டடக் கலையின் பொற்காலமாகும். சோழப் பேரரசர்கள்

ஏறக்குறைய 500 கோயில்களைக் கட்டியுள்ளனர். சோழர்காலக் கோயில்கள் வழிபாட்டு இடங்களாகவும், கலைக் கல்வி கூடங்களாகவும் திகழ்ந்தன. கட்டடக் கலை, சிற்பக் கலை, ஓவியக் கலை ஆகிய கலைகளின் வளர்ச்சிக்கு கோயில்கள் இடமளித்தன. கோயில் திருவிழாக்களும், இசை நிகழ்ச்சிகளும், நாடகங்களும் மக்களைக் கவர்ந்தன. மன்னர்களும், அரசியல் அதிகாரிகளும் கோயில்களுக்கு கொடைகளையும் தானங்களையும் அளித்தனர். கோயில்கள் மூலமாக நூற்றுக்கணக்கான மக்கள் வேலைவாய்ப்பு பெற்றனர்.

சோழ மன்னர்கள் போர்த்திறம் மிக்கவர்கள் தாம் பெற்ற வெற்றிக்கு அறிகுறியாகவும், பக்தியார்வ வெளிப்பாடாகவும் தமிழகத்தில் பல கோயில்களை கட்டியுள்ளனர். அரசர்கள் தங்குவதற்கான அரண்மனைகளை அமைத்தனர்.

**அரண்மனைகள்**

சோழர்கள் தம் அரண்மனைகளைத் தெய்வ ஆலயங்களைப் போல் கருங்கல்லால் கட்டாமல் செங்கல்லாலும், மரத்தாலும் கட்டினர். சோழர் ஆட்சிக் காலத்தில் கருவூலம், அந்தப்புரமாகிய உட்கோட்டை, படைக்கலக் கொட்டில், கோட்டைச் சுவர்கள் முதலியவற்றை திட்டமிட்டுக் கட்டியுள்ளனர். முதலாம் இராசேந்திரன் காலத்தில் பழையாறையிலும் அரண்மனை இருந்தது. கங்கை கொண்ட சோழபுரத்திலும் பல அடுக்குகளுடன் கூடிய பெரிய அரண்மனை இருந்துள்ளது.

விஜயாலயன், ஆதித்தன், பராந்தகன் ஆகிய சோழ மன்னர் காலத்தில் கட்டப்பட்ட கோயில்கள் முற்காலச் சோழர் கோயில்கள் எனப்பட்டன. முதலாம் பராந்தகனின் ஆட்சியில் நுண்கலைகள் வளர்ச்சியடைந்தன. இவருடைய ஆட்சியில் பழைய கோயில்கள் கற்றளிகளாகப் புதுப்பிக்கப்பட்டன.

சுந்தரசோழன் காலத்தில் கட்டப்பட்ட கோயில்களில் தலைச்சிறந்தது கொடும்பா;ர் மூவர் கோயிலாகும். இது மூன்று கற்றளிகளை உடைய கோயிலாகும். இக்கோயிலில் உள்ள சிற்பங்கள் சோழர்கால புகழை பறைசாற்றுகின்றன.

சோழர்கள் கோயில்கள் பல கட்டியுள்ளார்கள். ஆனால், சோழர் காலக் கட்டடக் கலையின் பொற்காலத்திற்குக் காரணமாய் இருந்தவை.

1. தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோயில்
2. கங்கை கொண்ட சோழேச்சுரம் கோயில்
3. தாராசுரத்து சிவன் கோயில்

**1. தஞ்சை பெருவுடையார் கோயில்**

சோழமன்னன் முதலாம் இராஜராஜனின் காலமே கட்டடக் கலையின் தலைச் சிறந்த காலமாகும். இவருடைய கலைப் பணிகளுள் தஞ்சாவூர் பெருடையார் கோயிலைத் தலையானதாகக் கருதலாம்.

இராஜராஜ சோழனின் பெருமைக்கும், பக்திக்கும் வெற்றிச் சிறப்புகளுக்கும் ஏற்ற பண்பாடுச் சின்னமாக தஞ்சை பெரிய கோயில் விளங்குகிறது. திருவிசைப்பா, திருப்பதிகாரம்,

திருப்புகழ் ஆகியவற்றில் இவற்றின் சிறப்பு பாடலாகப் பாடப் பட்டுள்ளது. இக் கோவிலில் உள்ள 64 கல்வெட்டுக்களும், இதர 29 கல்வெட்டுகளும் கோயிலுக்கு அளிக்கப்பட்ட கொடைகளைப் பற்றிக் கூறுகின்றனர்.

“கி.பி. 1003 ஆம் ஆண்டில் தஞ்சைப் பெரிய கோயிலின் கட்டுமானப் பணி தொடங்கி, 1009 – ம் ஆண்டில் கட்டி முடிக்கப் பட்டுள்ளது. கிழக்கு நோக்கிய கருவறையில் மிகப் பெரிய இலிங்கம் நிறுவி, அதனை நீரோட்ட மேனிலை ஆளோடிகள் அமைக்கப்பட்டு, மேனிலையிலே தென்பக்கச் சுவரில் நீர்த் தொட்டியும் அமைக்கப்பட்டுள்ளது.”2

(உடையார் – நாவல்)

எனவே இக்கோயிலை கட்டிமுடிக்க ஆறு ஆண்டுகளாயின எனத் தெரிகிறது.இதன் விமானத்தின் உச்சியில் செம்புக்கலசம நிறுவப்பட்டுள்ளது. கற்களே காணப் படாத தஞ்சைப் பகுதியில் எவ்வாறு பெரும் கற்களைக் கொண்டு வந்து இக்கோயில் கட்டி முடிக்கப்பட்டது என்பது வியப்புக்குரிய செய்தியாகும்.

இக்கோயில் 93 அடி நீளமும், 39 அடி அகலமும் உடையது. 500 அடி நீளமும் 250 அடி அகலமும் கொண்ட முற்றத்தின் மையத்தில் இக்கோயில் உள்ளது. பிரகாரங்களில் உட்சுவரில் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. கருவறையினுள் 54 அடி சுற்றளவும், 6 அடி உயரமும் உடைய ஆவுடையாரின் மேல் 9அடி உயரமான லிங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

இக்கோயிலின் சிமானம் பிரமீடு போன்ற கூர் கோபுர தோற்றமுடையது. விமானத்தின் உயரம் 216 அடியாகும்.

உலகிலேயே கோயில் கட்டுவதில் இணையற்றவர்கள் தமிழ் மன்னரென்றும், தஞ்சவூரில் கட்டப்பட்டுள்ள பெருவுடையார் கோயில் இந்தியாவிலேயே மிகச் சிறப்பான கோயில் என்றும் என்சைக்ளோ பீடியா பிரிட்டானிக்கா என்ற ஆங்கில கலைக் களஞ்சியம் குறிப்பிட்டுள்ளது.

தஞ்சை பெரிய கோயிலின் சிற்பங்கள் கலைப் பெட்டகங்களாகும். நந்தி சிற்பம், மார்க்கண்டேயர், தட்சிணாமூர்த்தி, நடராஜர், துவாரபாலகர் ஆகியவை கம்பீரத் தோற்றங்களைக் கொண்டதாகும். விமானச் சுவர்களில் பரதநாட்டியத்தின் 108 கரணங்களில் 87 கரணங்களை விளக்கும் சிற்பங்கள் செதுக்கப் பட்டுள்ளன.

“தமிழரின் கட்டடக் கலை தமிழரின் மரபுக்கே உரியது. தொல் பழங்காலம் முதற்கொண்டே தமிழர் கட்டக் கலையைப் பேணி, தனி முத்திரை பதித்து வளர்த்து வந்துள்ளனர்.”3 (வியக்க வைக்கும் தமிழர் அறிவியல்)

**2. கங்கை கொண்ட சோழபுரம்**

தஞ்சைப் பெருவுடையார் கோயிலைக் கட்டிய முதலாம் இராசராச சோழனின் மகனான இராசேந்திர சோழன் தன் தந்தை கட்டியக் கோயிலைப் போல தானும் ஒரு கோயில் கட்ட விரும்பினான். இக் கோயில் தஞ்சை பெருவுடையார் கோயிலின் அமைப்பை ஒத்துள்ளது. இது 6 கோபுரங்களைக் கொண்டுள்ளது. கோயிலின் மதில் 600 அடி நீளமும், 450 அடி அகலமும் 4 அடி

கனமும் கொண்டது. உட்கோவில் மற்றும் 140 தூண்கள் கொண்ட மகாமண்டபம் உள்ளது. இங்குள்ள நவக்கிரகம் வட்டவடிவிலான ஒரே கல்லில் அமைக்கப் பட்டுள்ளது. துவார பாலகர் சிலைகள் 12 அடி உயரமுடையவை.

தஞ்சை பெரிய கோயில் விமானம் ஆணின் கம்பீரத்திற்கும், கங்கை கொண்ட சோழீஸ்வரம் விமானம் பெண்ணின் நளினத்திற்கும் ஒப்பிடப்படுகின்றது. விமானத்திலும், மண்டபங்களிலும் தூண்களிலும் பல அழகிய சிற்பங்கள் உள்ளன.

**3. தாராசுரம் ஐராவதேசுவரர் கோவில்**

**'சிற்பிகளின் கனவு'** எனக் கருதப்படும் இந்த கோயில் முழுவதும் நுணுக்கமான சிறிய மற்றும் பெரிய சிற்பங்களால் நிறைத்துள்ளது. இக்கோயில் கருவறை விமானம் ஐந்து நிலை மாடங்களுடன் 80 அடி உயரம் உள்ளது. 63 நாயன்மார்களின் சிற்பங்களும் இந்தக் கோயிலில் வடிவமைக்கப்ட்டுள்ளன. மற்ற இரண்டு கோயிலை விட அளவில் சிறியதாக இருப்பினும், கம்பீரமாக விளங்குகிறது. முன் மண்டத்தின் தென்பகுதி கல்லாலான சக்கரங்களுடன் குதிரைகளால் இழுத்துச் செல்லப் படும் தேர் வடிவிலுள்ளது.

**தொகுப்புரை**

தமிழர் கட்டடக் கலை என்பது பண்டையத் தமிழர்களின் கட்டட வடிவமைப்பையும், கலையையும் அறிந்துக் கொள்ள சிறந்த வழியாகும். சமூக அமைப்பில் கோயில்களை முதன்மை கட்டுமானங்களாக கொண்டு, நுணுக்கமான செயல்களை அதனுள் புகுத்தியுள்ளனர். தமிழக கட்டடக்கலையில் பல்லவர்கள் காலம் புதிய பார்வையை உண்டாக்கியது. சோழர்கள் காலம் தமிழக கட்டடக் கலையின் வளர்ச்சிக் காலம் எனலாம். இதனை உறுதிப் படுத்த கம்பீரமாய் நிற்கும் மாமல்லபுரம், தஞ்சாவூர், கங்கை கொண்ட டீசோழபுரம், தாராசுரம் கோயில்கள் அழியாச் சின்னங்களாக நிலைத்து நிற்கின்றன.

**துணை நூற்பட்டியல்**

1. மாத்தளை சோமு - வியக்க வைக்கும் தமிழர் அறிவியல்
உதகம்
திருச்சி - 2005.

2. பாலகுமாரன் - உடையார்
விசா பப்ளிகே~ன்ஸ்
13, சிவப் பிரகாசம் சாலை
தி. நகர் சென்னை -17.